# தமிழ்நாடு வளர்ச்சியில் உச்சந்தொட்ட கலைஞர்!



இந்திய திருநாட்டில் அரசியல் வரலாற்றில் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு இயக்கத்தினுடைய தலைவராக தொடர்ந்து மக்கள் செல்வாக்கோடு செயல் பட்டு, மக்களின் செல்வாக்கோடு ஐந்து முறை தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்று சிறப்பாக மக்கள் திட் டங்களை கொண்டு வந்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

இந்திய அரசியல் வரலாற்றில், பிரதமர்கள், குடியரசுத் தலைவர்களை கலைஞர் தேர்ந்தெடுக்க காரணகர்த்தாவாகத் திகழ்ந்தவர்.

ஒரு மித்த கருத்தோடு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இந்திய நாட்டினுடைய வளர்ச்சிக்காக உழைத்தவர்! ஒட்டுமொத்த தமிழகத்தை தமிழக மக் களை தமிழகம் மட்டுமல்ல உலகம் முழுவதும் வாழு கிற தமிழர்களுக்கு பாதுகாவலராக, நல்ல ஒரு அற்புத மான தலைவராக எந்த நேரத்தில் யார் பாதித்தாலும் அவர்களை பாதுகாப்பதற்கு குரல் கொடுத்தவர் கலைஞர்

நூறாண்டு கால வரலாற்று சிறப்புமிக்க தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் - தமிழ கத்தில் ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் படித்தவர் கள், படிக்காதவர்கள் பாமர மக்கள், தொழிலாளர்கள், பாட்டாளிகள், விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் அத்தனை பேரும் போற்றுகின்ற பாராட்டுகின்ற தலை வராக வாழ்ந்தவர் கலைஞர்!

குறிப்பாக தொழிலாளர் நலத்துறை, போக்குவரத்து துறை இரண்டு துறைகளையும் இந்தியாவிலேயே தமி ழகத்தில் தான் முதல் முறையாக தனி அமைச்சர்களை நியமித்து, அந்த துறைகள் சிறப்புடன் செயல்பட வைத்து பட்டி தொட்டி எங்கும் குக்கிராமங்களுக்கும் தார் சாலைகள் அமைத்து, பஸ் போக்குவரத்து ஏற்பாடு, செய்து எல்லா கிராமங்களிலும் பள்ளிகள் திறந்து, மக்கள் மகிழ்ச்சியோடு வாழ, அயராது உழைத்த உத்தமத் தலைவர் மக்கள் தலைவர் கலைஞர்!



**கோவை கே.செல்வராஜ்**
முன்னாள் எம்.எல்.ஏ.
கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர்

ஏழைகளின் இல்லத்தில் ஒளி விளக் காக திகழ்ந்தவர், அனைத்து தரப்பு மக்க ளும் சிறப்புடன் வாழ்நாள் முழுவதும் உழைத்த அன்புத் தலைவர், பாசமிகு தலைவர், மற்றவர்களை எப்படி மதிக்க வேண்டும் என்பதற்கு அரசியல் பண் பாட்டை கடைபிடித்து அனைத்து தரப்பு அரசியல் தலைவர்கள், பொருளாதார வல்லுநர்கள், குடிமக்கள் என்று அனைத்து தரப்பு மக்களையும் பாசத்து டன் அரவணைக்கும் பாங்கு கழகத் தொண்டர்களை தன்னுடைய உடன்பி றப்பாக அரவணைத்துச் சென்றவர் கலைஞர்.

'உறவுக்கு கை கொடுப்போம் உரிமைக்கு குரல் கொடுப்போம்' என்று கலைஞர் அவர்கள் அற்புதமான வேத வரிகளில் கழகத்தின் நிலைப்பாட்டை எடுத்து ரைத்தார்.

இந்த மொழியை திணிப்பை ஏற்றுக் கொள்ள முடி யாது என்கிற நிலைப்பாட்டில் ஒட்டுமொத்த தமிழ் இளைஞர்கள் மூத்த குடிமக்கள் இந்தி எதிர்ப்பு போராட் டம் நடத்திய பொழுது ஏராளமான தமிழ் இளைஞர்கள் தங்கள் இன்னுயிரை சாய்த்தார்கள்.

தங்களை தாங்களே மாய்த்துக் கொண்டார்கள், அன்றைய பாரத பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்க ளிடம் பேரறிஞர் அண்ணா நாடாளுமன்றத்தில் இரு மொழிக் கொள்கை வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து நாடாளுமன்றத்தில் இருமொழி கொள்கைக் கான உத்திரவாதம் பெற்று அன்று முதல் இருமொழிக் கொள்கையே தமிழகத்தில் நிலைத்து நிற்க வைத்த பெருமை கலைஞரையே சாரும்!

நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறது அன்புத் தலைவர் தமிழக முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய அவருடைய உருவத் தில் உயிராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். பிரகாசமான தமிழ கத்தை உருவாக்க உறுதுணையாக இருந்து கொண் டிருக்கிறார் அற்புதமான தமிழகத்தை சிறப்பான திட் டங்கள் மூலம் உருவாக்க உறுதுணையாக இருந்து திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.

தமிழ் இருக்கும் வரை, தமிழ்நாடு இருக்கும் வரை, தமிழ் மக்கள் இருக்கும் வரை, உலகம் முழுவதும் வாழுகிற தமிழர்கள் அத்தனை பேருக்கும் 20 கோடி தமிழ் மக்கள் அத்தனை பேருக்கும் வாழ்வில் வளத் தையும், நலத்தையும் கொடுப்பதற்காக உழைத்துக் கொண்டிருக்கிறார் நமது முதல்வர்!

நமது முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் அவர் கள் நம் எல்லோரையும் கண்காணித்துக் கொண்டிருக் கிறார், யார் ஒருவர் கழகத்திற்கோ கழக செயல்பாட் டுக்கு உறுதுணையாக இல்லாமல் செயல்பட்டால், அவர்களையும் அடையாளம் கண்டு, கண்டித்து செயல்பட வைப்பார் அதுதான் தலைவர் கலைஞரின் பிரபஞ்ச சக்தி அந்த சக்தி நம்முடைய அண்ணன் தள பதி அவர்கள் மூலமாக பிரதிபலித்துக் கொண்டிருக் கிறது!

எந்நாளும் தலைவர் கலைஞரின் வழி நடப்போம் அவர் செயல் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி னாலே தமிழகத்தை எந்த சக்தியாலும் அசைக்க முடி யாது

திராவிட மாடல் ஆட்சி என்பது 125 ஆண்டுகால திராவிட பாரம்பரிய தலைவர்கள், அன்றய செயல்பாடு களும், 75 ஆண்டுகால திராவிட முன்னேற்றக் கழகத் தின் அற்புதமான செயல்பாடுகளும் நிலையான சக்தி யாக ஒட்டுமொத்த தமிழகத்தை தமிழர்களின் உரிமையை பேணிக் காக்கின்ற, கட்டிக் காக்கின்ற, தார்மீக பொறுப்பு மிக்க இயக்கம் கழகம்!

நம்முடைய தலைவரின் வழி நின்று செயல்படு வோம் என்றும் உண்மையாக இருப்போம், விசுவாசமாக இருந்து செயல்படுவோம் இதுதான் இந்த நூறாவது ஆண்டில் தலைவரின் பிறந்த தினத்தில் சூளுரைக்கின்றோம்! உரைக்கிறோம்

வெற்றி பெறுவோம்!
சொல்வோம் வெல்வோம்!
செய்வோம் சாதிப்போம்!

தலைவரின் ஆட்சியின் சாதனைகள் 1969 லிருந்து ஆற்றிய மக்கள் சரித்திர சாதனைகள் சுமார் 54 ஆண் டுகளுக்கு மேலாகி விட்டதால்

இன்றைய 18 வயதிலிருந்து 50 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு தெரிவதற்கு வாய்ப்பில்லை, அற்புத மான திட்டங்களை சாதனைகளை இந்த வரலாற்று சிறப்புமிக்க சரித்திர புகழ் வாய்ந்த செயல்களை இந்த கட்டுரை மூலம் எழுத வேண்டும் என்று உறுதி பூண்டு எழுதி இருக்கிறேன் இந்தத் திட்டத்தை செயல்பாடு களை மக்களிடம் எடுத்துச் செல்லுவோம் மக்களின் ஏகோபித்த ஒட்டுமொத்த ஆதரவையும் பெறுவோம்

தொழிலாளர்களின் உரிமையை வாழ்வாதாரத்தை பெற்றுகொடுத்ததை தெரிந்து கொள்வோம்.

தொழிலாளர் நலன் காக்க நேரம் காலம் இல்லாமல் கடுமையாக தொழிலாளர்களை குறிப்பாக பஞ்சாலை கள் இயந்திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற் றும் பெரிய ரக தொழிற்சாலைகள் தினசரி 12 மணி நேரம் சராசரி வேலை நேரமாக நியமித்து வேலை வாங்கிக் கொண்டிருந்த காலம் தொழிற்சங்கங்கள் முறையாக இல்லாத காலம் அது!

புதிய தொழிற்சாலைகள் ஏராளமாக தமிழகத்தில் ஆரம்பித்தாலும், எல்லா தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்களை அச்சுறுத்தி பணி வாங்குவது தொழிலாளர்களுக்கு என்று எந்த சட்ட திட்டங்கள் இல் லாத நேரமும் அது! கடுமையாக உழைத்தும் தொழி லாளர்களுக்கு முறையாக ஊதியம் கிடைக்காத காலம் அது! தினசரி தொழிற்சாலைகளில் வேலை வாங்கும் அதிகாரிகள் அதாவது மேஸ்திரி சூப்பர்வைசர், மேனே ஜர் போன்று அவர்கள் வைத்து தான்.

அந்த நேரத்தில் தமிழகத்தில் 1969இல் தொழிலா ளர்களுடைய தினமான மே தினம் ஊதியத்தோடு சம்ப ளத்தோடு விடுமுறை என்கிற ஒரு சட்டத்தை இயற்றி தொழிலாளர் தினம் அரசு விடுமுறை தினமாக அறிவித் தவர் தலைவர் கலைஞர் அவர்கள் அந்த நாளில் இருந் துதான் ஒவ்வொரு ஆண்டும் மே தினத்துக்கு ஊதியத் துடன் கூடிய விடுமுறை என்று எல்லாத் துறைகளிலும் பணியாற்றுபவர்க ளுக்கு பெற்று கொடுத்தது மட்டுமின்றி தொழிலாளர்களுக்கு முறையான சட்ட திட்டங்கள் இயற்றப்பட்டு தொழிலாளர் நலத்துறை உருவாக்கியதும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான்!

தமிழகத்தில் குறிப்பாக சென்னை மதுரை ஊர்களில் எல்லாம் கைரிக்ஷா ஆட்களை உட்கார வைத்து தாங்களே அவர்களை வைத்த இழுத்துச் சென்று அவர்கள் படுகிற வேதனையை பார்த்து உடனடியாக கைரிக்ஷாலை ஒழித்து சைக்கிள் ரிக்ஷாவை அவர்களுக்கு வழங்கி அவர்கள் வாழ்வில் ஒளி வைத் தவர் கலைஞர்!

அவர் காலத்தில் தான் ஏராளமான தொழில் நிறுவ னங்கள் தமிழகத்தில் துவக்கப்பட்டன. திருப்பெரும்புதூரில், அம்பத்தூரில், கோவை, திருச்சி பிரம்மாண்டமான தொழில் நிறுவனங்கள் வருவதற் கும், இன்றைக்கு ஏற்றுமதி செய்வதிலும் இந்தியாவில் உள்நாட்டு விற்பனைகளில் முதல் இடத்தில் இருக்கிற பெரிய நிறுவனங்கள் தமிழ்நாட்டிற்கு வருவதற்கு கார ணமாக இருந்தவர் கலைஞர்!

இதோடு தமிழக முழுவதும் கிராமங்களுக்கு சாலை வசதி பஸ் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தினார்.

அதோடு மட்டுமல்ல கலைஞர் அவர்கள் 25 புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டு 37 புதிய தொழில் நிறுவனங்கள் கொண்டு வந்து 41 ஆயிரம் கோடியில் முதலீட்டை கொண்டு வந்து புதிய தொழில் புரட்சியை ஏற்படுத்தியவர் கலைஞர்!


புதிதாக டைட்டல் பார்க் சென்னையில் உருவாக்கி னார் கலைஞர்!

தொழிலாளர்களின் பாதுகாவலராக, தொழிலாளர்க ளின் உரிமைக்கு குரல் கொடுப்பவராக, தொழிலாளர் களை முழு உரிமையைப் பெற்ற சுதந்திரமாக, அவர் கள் இருக்க வேண்டும் என்பதற்காக அற்புதமான செயல் திட்டங்களை கொண்டு வந்தவர் கலைஞர்!

கலைஞர் வழியில் தற்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பால் தொழிற் சாலைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. 3,223 கோடி அளவுக்கு தொழில் முதலீட்டு ஒப்பந்தங்கள் ஏற் பாடு செய்யப்பட்டு சிங்கப்பூர் ஜப்பான் நாடுகளில் தமி ழக முதலமைச்சர் அவர்கள் 9 நாள் பயணம் சென்று பிரம்மாண்டமான தொழில் நிறுவனங்கள் தொழில் அதிபர்களை சந்தித்து முதலீட்டாளர்களை அந்த நாடுக ளில் மாநாடு நடத்தி அவர்களோடு கலந்து பேசி ஜனவரி மாதம் தமிழகத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 10தேதியும் 11ஆம் தேதி நடத்துவது என்று முடிவு எடுக் கப்பட்டு முதலமைச்சர்அவர்கள் இப்பொழுது உலகம் முழுவதும் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு தமிழக தொழில் துறை அதிகா ரிகளும் தொழில்துறை அமைச்சர் அவர்களும் நேரில் சென்று அழைத்து ஒரு மாபெரும் தொழில் முதலீட்டு திட்டத்தை கொண்டு வந்து அவர்களுக்கு எல்லா உத விகளும் செய்யப்பட்டு பிரம்மாண்டமான தொழில் வளர்ச்சியில் இந்தியாவில் தமிழகம் முதல் இடத்துக்கு கொண்டு வர வேண்டும் என்பதற்காக உழைத்துக் கொண்டு இருக்கிறார் நமது முதல்வர்!

முத்தமிழறிஞர் கலைஞர் வழி நின்று முதலமைச்சர் அவர்கள் எதை கையில் எடுத்தாலும் அதில் வெற்றி பெற்று வரலாறு படைத்து சரித்திரச் சாதனை படைத்து வருகிறார்!

# உலகத் தமிழரெல்லாம் கலைஞர்க்கு நூற்றாண்டு விழாக் காண்போம்!



உலகத்தின் மூத்தகுடி ஒளிமல்கும் தமிழ்க்குடியே
உலகத்தின் மூத்தமொழி ஒண்டமிழே!
பல்கற்றே பல்லாண்டு பல்லாண்டின் முன்பேதான்
பன்னூறு கருத்துவளம் பண்பாட்டை
நிலம்பெற்றே அறிவாண்மை நெறிஒழுக்கம் காதல்வீரம்
நிறைஅன்பின் வழிதமிழர் வழியே தான்
நலம்கெட்டே மூவேந்தர் நன்றாட்சி, வீழ்ச்சியுற்றே
நாமிழந்தே சிதறுண்டோம் வன்கண் மையால்!

சிதறடித்தே பன்னாட்டார் சீரழித்தார் தமிழினத்தை
திராவிட நம்இயக்கத்தார் திறம் மறத்தால்
முதன்மை தமிழ் தமிழினத்தை மூண்டெழுந்த இயக்கதாலே
முதிர்அறிவுத் தந்தை பெரியார் அறிஞரண்ணா
இதயத்தின் எழுச்சிமிகு எரிமலைகள் வெடித்ததைப் போல்
இடர்செய்தார் பகைமைகள் இடிகள் வென்று
உதயசூரியன் ஒளியை உதிக்கச்செய் கழகத்தாலே
உடன்பிறப்பாய்ப் பாதுகாத்தார் கலைஞரன்றோ!

தமிழ்நாடு எனும்பெயரை தகைமைசால் அண்ணாகண்டார்
தாயகத்தை ஒன்றியத்தின் இந்தியத்தார்
உமிபோலத் தமிழர்களை ஊதியேவெல் கொள்கையேந்தி
உறுதியுடன் நிமிர்ந்து பகைமை கலைஞர்வென்றார்!
தமிழ்தமிழர் அடிமையால் தலைமைஎமின் மொழிநாடென்னும்
சங்கூதி முழக்கமிட்டே ஒன்றியத்தார்
திமிரடக்கி தமிழ்த்தேச சிறப்பிற்கே மீட்சிதந்தார்
செந்தமிழர் மானம் காக்கும் கலைஞரேறே!

அரிமாபோல் முன்பின்னும் அறிந்து பார்த்த ஆளுமைக்கோ
அன்றிலன்பாய் தமிழ்மக்கள் நெஞ்சமர்ந்தார்
உரிமைகளை தமிழர்பெற உயிர்மூச்சுக் காற்றானாரே!
உயர்கழகம் தமிழர் அரண்தனைச் சிதைக்க
வரிந்து கட்டி வந்தவரை வரிப்புலியின் சினத்ததனால்
வலிமைகோ கலைஞர்தான் தி.மு.க. காத்தார்!
விரிமாசில் மனத்தாலே வென்றதனால் இன்றோ நம்
வெற்றிமுரசாய் இஸ்டாலின் ஆட்சி கண்டோம்!

நூற்றாண்டே எட்டும்வரை கலைஞர்தாம் ஆட்சி தந்தார்
நோற்றுநோற்றுத் தமிழ்தமிழர் வாழச் செய்தார்!
வேற்றுமைகள் வேண்டாத வீண்வம்பை விரட்டிஆக்கம்
வெற்றிதமிழ் நாடுயர்த்தி மாட்சி தந்தார்
மாற்றாரும் போற்றுவகை மாந்தநேயம் தமிழ்நாட்டில்
மறுமலர்ச்சி கண்டார் யார்? கலைஞரைப் போல்!
கூற்றுவனோ கலைஞருயிர் கொண்டானெனில் அவனைவென்றுக
குவலயத்தில் புகழுருவாய் உயிர் வாழ்கின்றார்!

கலைஞர்தமிழ்ப் பரம்பரைக்கே தந்தகொடைகளுள்ளே இன்று
காண்பரிய சமநீதி எல்லோர்க்கெல்லாம்
விலைமதிக்க முடியாதவெல் முதல்வராய் ஆட்சிசெயும்
வீரமிக்க மு.க. இஸ்டாலினைத் தந்த கொடைதான்!
தலைமைத்து வம்ஆகும்! தமிழ் முன்னேற்றக் கழகம் இலண்டன்
தகைமை நூற்றாண்டுவிழா கொண்டாடல் சுயமரியாதை
மலைநிகர்த்த மாக்கலைஞர்க்கு மாவுலகத் தமிழரெலாம்
மாண்புநூற் றாண்டுவிழாக் காண்பீர்! நன்றே!

பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**



## திருவேற்காடு நகராட்சி பகுதியில் ரூ.2.95 கோடி மதிப்பீட்டில்

# மழை நீர் கால்வாய் - அங்கன்வாடி - பள்ளி கட்டிட பணிகள்!

### மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்!

*திருவள்ளூர், ஜூன் 4-*

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மாவட்ட கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சாமு நாசர் எம்.எல்.ஏ. திருவேற்காடு பல்வேறு பகுதிகளில் ஆய்வுக்குச் சென்ற போது அப்பகுதி மக்கள்மற்றும் பள்ளி ஆசிரியர்கள் கூடுதல் பள்ளி கட்டிடம் மற்றும் அங்கன்வாடி மழை நீர் கால்வாய் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். இந்த நிலையில் ஆவடி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 4 வது வார்டு பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் பள்ளி கட்டிடம் மற்றும் 15ஆவது வார்டில் 15 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டிடம் மற்றும் 1 வார்டு பகுதியில் ரூ.2.46 கோடி மதிப்பீட்டில் புதிய மழைநீர் கால்வாய் அமைக்கப் பணிகள் துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நகராட்சி மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி வரவேற்புரையாற்றினார்.

நகராட்சி ஆணையர் ஜகாங்கீர் பாஷா, நகராட்சி பொறியாளர் குமார், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ. பவுல், வார்டு கவுன்சிலர்கள் எஸ்.சங்கர், கே.பி. எஸ்.சுதாகர், சாந்திராஜா முன்னிலை வகித்தார்கள் இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சாமு நாசர் தலைமை வகித்து பணிகளை துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இதில் ஆவடி மாநகராட்சி மேயர்கு.உதயகுமார், ஆவடி மாநகர கழக பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி கழக செயலாளர் ஆவடி ராஜேந்திரன், நாராயண பிரசாந்த், நகரக் கழக நிர்வாகிகள் ஜெ.சரவணன், பாண்டுரங்கன் நடராஜ், மற்றும் கவுன்சிலர்கள் வட்டக் கழக செயலாளர் எம்.பன்னீர்செல்வம், குமார், கோமதி கோபால், விஜயலட்சுமி தெய்வசிகாமணி,பி.உமாபதி, பிரதானம், பி.வி.கே.கண்ணன், சுடலைமணி இளைய ராஜா, என்.ராஜி, நாராயணன், நரேஷ், உள்பட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



செஞ்சி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கழிவறை கட்டிடத்தை மாணவிகளின் பயன்பாட்டுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறைஅமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் உள்ளனர்.